போதனா விஷய பூங்கொத்து

...தமொருமுறை மலரும்

அறிவு ★ உழைப்பு
ஒழுக்கமே திறமை
...நேச மாதா ... ஆசை தாதா

...OF THE REGISTRAR OF ...
16 JUL 1943
MADRAS
87

...A. Lourduswami, B.A., L.T.
...Training School, Trichinopoly.

5 ஜுலை 1943 மலர் 1

...ழி...ற பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

...ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1½.

போதனா [illegible] பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	1
2.	பரீக்ஷையும் பயிற்சியும்	4
3.	கணிதபோதனையில் மனக்கணக்கின் அவசியம் ...	5
4.	"பள்ளித் திண்ணையில்"	7
5.	பாடக் குறிப்பு	11
6.	சிறு கதை	12
7.	எந்நேரத்திலும் உதவும் மருந்துகள்	13
8.	யோசனைக்கணக்கு விடை	14
9.	விடுகவி விடைகள்	14
10.	கழுதைகள் உபயோகமற்றவையா?	15
11.	யோசனைக் கணக்கு	16
12.	விடுகவிகள்	16
13.	"உங்களுக்குத் தெரியுமா"	17
14.	மூலிகைகள்	18
15.	திருச்சி ஜில்லா லேபர் ஆசிரியர் சங்கம்	19
16.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	20
17.	சங்கீதம்	21

Rates of Advertisement

PERIOD	HALF PA[illegible]	
	Rs.	A[illegible]
1 Month	4	[illegible]
3 Months	11	[illegible]
6 Months	20	0
1 Year (11 Issues) ...	30	0

போதனை விஷயப் பூங்கொத்து

கோத்து 34] 15 ஜூலை 1943 [மலர் 1

OFFICE OF THE REGISTRAR ... MADRAS 16 JUL 1943
189978

பத்திராதிபர் குறிப்புகள்

பூங்கோத்தின் புத்தாண்டுப் புதுமலர்: சென்ற ஜூன் மாதத்தோடு, நமது "பூங்கொத்தின்" 33-வது ஆண்டு நிறைவுற்று, இந்த ஜூலை மாதத்திலிருந்து 34-வது கொத்தும், அதன் முதல் மலரும் தொடங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில், நம் வாசகர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

காகிதப்பஞ்சம், பணநெருக்கடி, பொருள் போதாமை முதலிய காரணங்களால், அநேக அநேக பத்திரிகைகள், நலிந்தும், சிதைந்தும், அடியோடு நிறுத்தப்பட்டும் போயிருக்கின்ற இக்காலத்தில், நம் "பூங்கொத்து" வழக்கம்போல், குணத்திலும் மணத்திலும் குன்றாமல் குறையாமல், ஆசிரியரின் பொருட்டுச் சேவைபுரிந்துகொண்டு வருவதை நம் நேயர்கள் அறியாமலிரார். எனினும், நம் பழைய மாணவர்களும் ஏனைய நேயர்களும் தத்தம் சந்தாக்களைப் புதுப்பித்துக்கோண்டும், புதுச் சந்தாதாரர்களை இன்னும் அதிகமாய்ச் சேர்த்தும் தங்கள் அன்பையும் ஆதரவையும் நிரம்பக் காட்டி வருவார்களானால்,

"பூங்கொத்தின்" பயனை அனைவரும் எய்தும்படி பணியாற்றி வருவது எமக்கு எளிதாகுமன்றோ! இதனை நம் அன்பர்கள் நினைவுகூர்ந்துணருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். இதுகாறும் நம் "பூங்கொத்தை"ப் போற்றி வந்துள்ள நம் நேயர்கள் இனிமேலும் அதிகமதிகமாய்த் தங்கள் அபிமானத்தைப் பெருக்கி வருவர் என்று முற்றிலும் நம்புகின்றோம். மற்றும் ஓர்முறை எமது நன்றியையும் வாழ்த்துதலையும் இப்புது மலர் மூலம் அனைவர்க்கும் தெரிவித்துக்கொள்கின்றனம்.

பூங்கொத்து சந்தாவை மணியார்டர் (M. O.) மூலம் அனுப்புவோர், தயவுசெய்து தங்கள் பழய நம்பரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதித் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சென்ற ஜூன்-மீ மலரின் நம்பர் 12, அதற்கு முந்திய மலர் 10, 11, ஏப்ரல்-மே ஆகிய இரண்டு மாதங்களுக்கும் சேர்ந்த ஒரே மலர் என்பதை நம் சந்தாதாரர்களிற் சிலர் அறிந்து கொள்ளாமல், நம்மை வினவுவது விந்தையாய் இருக்கின்றது. ஏப்ரல்-மே இவ்விரண்டு மாதங்களுக்கும் சேர்த்து ஒரு மலர் பிரசுரித்து வருவதுதான் வழக்கம்.

* * *

நமது பாடசாலை வருஷத்தியானம்: இஃது அடுத்த ஆகஸ்டு-மீ 12, 13, 14-ம் தேதிகளில் வழக்கம்போல் இங்கு நடைபெறும். அச்சமயம் தியானம் செய்யவிரும்பும் நம் பழய மாணவர்கள் தங்கள் விருப்பத்தை முன்னதாகவே இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு எழுதித் தெரிவிக்கவேண்டும். போஜன வசதி முதலியவற்றிற்கு, நம் பழய மாணவர்க்கென்று, குறைந்த சார்ஜில் ஏற்பாடு செய்யப்படும்.

* * *

சென்னை-600 008

T. S. L. C. பரீட்சை **1943**. இப்பரீட்சையில் நம் பாடசாலை **ஸெக்கண்டரி** கிரேடு மாணவர்களும், **எலிமெண்டரி** கிரேடு மாணவர்களும் வெகுத் திறமையாய்த் தேறியுள்ள விவரம் ஏற்கனவே சென்ற மாதத்தில் தெரிவித்துள்ளோம். எலிமெண்டரி கிரேடு பரீட்சை எழுதிய 85 பேர்களில் பின்வரும் 6 பேர்கள்தான் தேறவில்லை. மேலும் அவர்களில் ஒருவராவது எல்லாப் பாடங்களிலும் தவறினவர்களல்லர்; இரண்டொரு பாடங்களில் மட்டுமே தேறவில்லை. அவர்களது பெயரும் அவர்கள் தவறிப்போன பாடங்களும் (Group) பின்வருமாறு :—

Elementary Grade—(Revised Scheme) Candidates failed

No.	Name		Groups of subjects in which failed
13374	S. Thomas	...	B
13382	V. Susai Raj	...	A D
13396	S. Belevandram	...	A C
13419	A. Soosaimanickam	...	B
13420	V. Ignaci	...	A D
13427	D. S. Thomas Ponnusamy	...	B

16 JUL 1943 MADRAS

Note :—A : Child Nature and School Administration.
B : Tamil.
C : Mathematics and Nature Study Methods.
D : History and Geography Methods and Rural Social Problems.

Public Examination in VIII Std. 1943. இப்பரீட்சைக்கு, நம் மாதிரிப்பாடசாலை VIII வகுப்பிலிருந்து **6** பேர்கள் ஷெ பரீட்சை எழுத அனுப்பப்பட்டனர். அவர்களில் **4** பேர் தேறிவிட்டனர். ஏனைய பாடசாலைகளோடு ஒப்பிடுகையில் நம் மாணவர்கள் வெகுத் திறமையாய்த் தேறியுள்ளனர் என்பது தெற்றென விளங்கும். அவர்களது நெ. பெயர் முதலியன பின்வருமாறு :—

No.	14073	M. Lourdusamy.	No.	14076	R. Mariafrancis.
,,	14074	A. Lourdusamy.	,,	14077	A. Susairaj.

பரீக்ஷையும் பயிற்சியும்

(P. G. S. Aiyar, B.A., L.T.)

தற்காலக் கல்விமுறையில் பரீக்ஷைகள் முக்யஸ்தானத்தை வகிக்கின்றதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி விவாதங்களும் அபிப்பிராயபேதங்களும் மலிந்து கிடக்கின்றன. தற்காலக் கல்வித்திட்டமே பரீக்ஷைமயமாகவிருக்கின்றதென பலரும் குறைகூறுகின்றனர். ஆசிரியர்களின் முயற்சிகள் யாவும் பரீக்ஷைகளுக்குத் தயார்செய்வதிலேயே செலவிடப்படுகின்றது; உண்மையில் அறிவு விருத்தியேற்படுவதில்லையென்றும் எடுத்துக்காட்டப்படுகின்றது. ஆனால் பரீக்ஷைகளை எந்த தேசத்திலும் முழுவதும் நிராகரித்துவிட்டார்கள் என்று சொல்லிவிடமுடியாது.

பரீக்ஷைகள் நமது கல்விமுறையில் அவசியமான ஒரு கெடுதலாகக் கருதப்படுகின்றது.—It is a necessary evil. சிறுவர்களின் அறிவையும் தேர்ச்சியையும் அளப்பதற்கு இவைகளைத்தவிர வேறெந்த சாதனமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆசிரியர்களும் இவைகளின் மூலமாகவே தங்கள் உழைப்பின் பலாபலனையும் சீர்கேட்டையும் கண்டுணரவேண்டியிருக்கின்றது. நாம் பரீக்ஷை முறையை எவ்வளவு தாக்கியபோதிலும், அதனைக் கைவிடமுடியாத நிலையிலிருக்கின்றோம்.

ஆதலால் இதனைக் குறைகூறுவதைவிட்டு, சீர்திருத்தமுயல்வதே அறிவுடையகாரியமாகும். இங்கு பரீக்ஷைகளை எவ்விதம் சீர்படுத்தி கல்விக்கேற்ற பயிற்சிமுறைகளாக ஆக்கமுடியும் என்பதைக் குறிப்பாகக் கவனிப்போம்.

பரீக்ஷைக் கேள்விகள் மாணவர்களைத் திகைக்கவைக்கக்கூடியதாகவோ அல்லது கேள்வித்தாள் தயாரித்தவரின் அறிவுக்குச் சான்றாகவோ விளங்கவேண்டியதில்லை. மாணவர் கற்றறிந்த விஷயங்களைத் தெளிவுடன் எடுத்துரைப்பதற்கு ஏற்ற கேள்விகளையே கேட்கவேண்டும். படித்ததை அப்படியே ஒப்புவிக்க அனுமதிக்கக் கூடாது. தாங்களே ஆலோசனைசெய்து கற்ற விஷயங்களைப் பாகுபாடுசெய்து எழுதும்படியான சில கேள்விகளையும் கையாளவேண்டும். கேள்விகள் ஒரேவிதமாக அமையக்கூடாது. புத்திநுட்பத்தை அபிவிருத்திசெய்யக்கூடிய சிறிய கேள்விகளும் காணப்படவேண்டும். இவ்விதம் பரீக்ஷைகளைத் தகுந்தமுறையில் கையாளுவோமானால் அவை மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி முறைகளாகும். இவ்வகையில் பாடுபட்டால் இரண்டு மூன்று பரீக்ஷைகளுக்குப்பிறகு உண்மையிலேயே சிறுவர் முன்னேறியிருப்பதை நாம் நிச்சயமாகக் கண்ணுறலாம்.

கணிதபோதனையில் மனக்கணக்கின் அவசியம்.

(By Mr. A. Antonimuthu, Teacher)

ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் கணிதபோதனையில் உபாத்தியாயர்கள் கவனிக்கத்தகும் முக்கிய விஷயம் மனக்கணக்கென்ருல் மிகையாகாது. ஏனென்ருல், கணிதத்தேர்ச்சிக்கும் பிள்ளைகளின் மனப்பயிற்சிக்கும் மனக்கணக்குகளே இன்றியமையாதனவாம். மனக்கணக்குகளின் அவசியமும் அவற்றைக் கையாடும் முறையும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமென்ருலும், இதனைப்பற்றிய பிரச்னைகளை அடிக்கடி கவனிப்பது பிரயோஜனகரமாகும் என்பதில் ஐயமில்லை.

கணிதத்தில் தேர்ச்சியை அடைவதற்கு முக்கிய சாதனம் வேகமாயும் திருத்தமாயும் கணித்தல் எனலாம். திருத்தமாய் கணக்குகள் செய்யப் பழகியபின், வேகமாய் செய்வதில் பழக்கம் கொடுக்கவேண்டும். இதற்கு முக்கியமாக உதவக்கூடியது மனக்கணக்கேயாம். மேலும் மனக்கணக்கில் அதிகப் பயிற்சி இருந்தால்தான் எத்தகைய கணக்கையும் யோசித்து நிதானித்துச் செய்வதில் பிள்ளைகளுக்குத் திறமையுண்டாகும். எந்தக் கணக்கைச் செய்யவேண்டுமென்ருலும் சரியான மனயோசனையின்றி அதனைச் செய்யமுடியாது என்பது அனுபோக ஞானமாம். இதிலிருந்து எல்லாக் கணக்குகளும் மனக்கணக்குகள் என்றே அர்த்தம்கொள்ளலாம். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கஷ்டமான பெரிய எண்கள் வரும்போதுமாத்திரம் கணக்கை எழுதிச் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். மேலும் சுற்றிக்கொண்டே போகக்கூடிய கணக்குகளைச் செய்வதில், மனதால் எல்லாப் படிகளையும், ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட எண்களையும், ஞாபகத்தில் வைத்துக்கொள்வது சாத்தியப்படாதாகையால், அப்பொழுது எழுத்துக் கணக்குகள் உபயோகிக்கப்படவேண்டும். பிள்ளைகளின் மனேசக்திகளை விருத்தி செய்யக்கூடியதும் மனக்கணக்காகையால் அதனை முக்கியமாகக் கவனித்து ஒவ்வொரு வகுப்பிலும் மனக்கணக்கப்பியாசத்திற்குப் போதுமான இடம் தந்து கணிதம் போதிக்க வேண்டும்.

பிள்ளைகள் அதிகமான வேலைகள் செய்யவேண்டும்; அதிலிருந்து ஒவ்வொருவனின் திறமையையும் அறியவேண்டுமென்ருல், எழுத்துக் கணக்குகள் கொடுக்கவேண்டும். அச்சமயங்களில் மனக்கணக்குகள் அதிகமான பயனை அளிக்கமாட்டா. ஏனெனில் வெகுநேரம் யோசனை செய்வதில் பிள்ளைகள் சுறுசுறுப்பாய் இருக்கமாட்டார்கள். கீழ் வகுப்புகளில் மனக்கணக்கிற்கும், மேல் வகுப்புகளில் எழுத்துக்

கணக்கிற்கும் அதிகமான இடம் தந்து கணிதம் போதிக்கவேண்டு மென்பது முடிவு.

மனக்கணக்குகள் கொடுப்பதில் உபாத்தியாயர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களாவன: (1) கேள்விகள் சுறுசுறுப்பாயும், துரிதமாயும் கேட்கவேண்டும். (2) முணுமுணுப்பு, உதட்டசைத்தல், விரல்விட்டெண்ணல் முதலான குறிப்புகளை நீக்கவேண்டும். (3) மனக்கணக்குகளெல்லாம் சிலேட்டில் அல்லது காகிதத்தில் எழுதிச் செய்துபார்க்கும் கணக்குகளுக்கு உதவக்கூடியவைகளாக இருக்க வேண்டும். (4) வகுப்பிற்குத் தகுந்த கணக்குகளை உபாத்தியாயர் முன்னாலேயே தயாரித்துக்கொண்டு வரவேண்டும். (5) வேண்டிய அளவிற்குமேல் ஒரு கணக்கைச் செய்ய நேரம் கொடுக்கக்கூடாது. (6) கேள்விகளெல்லாம் வேறுபாடுள்ளவையாகவும் தெளிவாகவும் இருப்பதுடன், பிள்ளைகளுக்கு அதிகச் சிரமத்தை உண்டுபண்ணாமலும் இருக்கவேண்டும். (7) பாட்முடிவில் மனதாற் செய்யும்படி கொடுத்த சில கடினமான கணக்குகளைச் செய்துபார்க்கும் வழியைக் காட்டுவதற்காக, அதனைக் கரும்பலகையிலும் குறித்து எழுதிச் செய்யவேண்டும்.

N.B.—மனக்கணக்குப் பாடத்தில் நீக்கவேண்டிய அம்சங்களாவன :—

1. அதிகநேரம் மனக்கணக்குகள் கொடுத்தல்.

2. பொருளற்ற—அர்த்தமில்லாத எண் சம்பந்தப்பட்ட கணக்குகள் கொடுத்தல்.

3. பிள்ளைகள் பார்த்து கணக்கு விடைகளை எழுதுவதைக் கவனித்துக் கண்டிக்காது விட்டுவிடுதல்.

4. கணக்குகளைத் திருப்பித்திருப்பிப் பலதரம் சொல்லுதல்.

5. நடைமுறையிலோ, சுற்றுப்புறத்திற்கு ஏற்றதாகவோ, இராத கணக்குகளைக் கொடுத்தல்.

6. கதைபோல் நீண்டிருத்தல், இன்னும் இவைபோன்ற குறைபாடுகளை நீக்கி, மாணவர்களின் சக்திக்கு ஏற்றதான, பலதரப்பட்ட, அனுபவ அப்பியாசங்களை மனக்கணக்கில் சேர்த்து, படிப்படியாய் மாணவர்களின் மனப்பயிற்சியை வளர்க்க ஆசிரியர் முற்படவேண்டும்.

"பள்ளித் திண்ணையில்"

(N. R. திருவேங்கடம்)

189978.

4. பெண் கல்வியின் அவசியம்

வழக்கம்போல் வந்து திண்ணையில் அமர்ந்தேன். நாயக்கர், கோனார், முத்துராஜா எல்லோரும் எதைப்பற்றியோ பேசிக்கொண்டே பள்ளிக்கூடத்தின் பக்கமாக வருகிறார்கள்.

நான் :—வாருங்கள்! வாருங்கள்! உங்கள் வரவிற்காகத்தான் காத்திருக்கின்றேன். இன்றைக்கு ஏனோ காலதாமதம்?

கோனார் :—குட்டிங்களே எம்மவ ராமாயி ஓட்டிப்போயிருந்தா. சிறு புள்ளே எதோ வெளயாட்டுத்தனமாயிருந்ததிலே ஒரு குட்டி எப்புடியோ தவறிப்போச்சு. வாத்தியாரய்யா, அதனால்தான் நேர முங்க!

நாயக்கர் :—அடடா! பாவம்! பிறகு குட்டி கெடச்சுதா?

முத்துராஜா :—கிடைக்கிறதாவது, பாழாவது, அது இன்னேரம் எந்த நரி வயத்திலேயோ! பாவம்! விலைவாசி சூடா விக்கிர இந்தக் காலத்திலே கோனாருக்கு அனுமத்தா ரூபாய் பத்து சொளையாய் நட்டம்!

நான் :—வேணும், வேணும், இன்னும் அதிகமாய் நஷ்டமாகணும். அப்பத்தான் நீங்களெல்லாம் வழிக்கு வருவீர்கள்!

நாயக் :—என்ன சார்! ஒரு மனிதனுக்கு அகஸ்மாத்தாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே என்று நாங்கள் அங்கலாய்க்கிறோம். நீங்கள் வேணும் வேணும் என்கிறீர்கள். அப்படியானால் நாங்கள் நஷ்டமடைந்தால் நீங்கள் சந்தோஷப்படுவீர்களோ?

நான் :—ஆம், எனக்கு சந்தோஷமே!

மு. ராஜா :—ஊரான் சொத்துதானே போகட்டுண்ணு வாத்தியார் கொட்டமடிக்கிறார்? அவருக்கு ஒரு நாளைக்கு நஷ்டமாகாதா?

நாயக் :—சார்! ஏன் இன்று இவ்வளவு வேகம்? அதைச் சொல்லலாமா?

நான் :—கோபமில்லை, தாபமில்லை. கோனார் சொல்லிவந்ததை முழுதும் நீங்கள் கேட்டீர்களல்லவா?

மு. ராஜா :—கேட்டோம் அதிலொன்றும் தவறில்லையே! என்ன சார்.........

நான் :—ஆம், போதும், போதும். அவர் என்ன சொன்னார்? குட்டியை யாரிடத்தில் ஓட்டிவிட்டார்?

கோனார் :—என் மவ ராமாயி வசம் ஓட்டிவிட்டேன். வாத்தியாரய்யா!

N43.941

நான் :—அந்த குழந்தைக்கு என்ன வயதிருக்கும்?

கோனர் :—இந்த ஆடி வந்தா ஏழு வயசு ஆவுதுங்க!

நான் :—இந்த சிறு குழந்தைகளை எல்லாம் சிறு வயதில் தகப்பனர் எவ்விதம் வளர்க்கவேண்டும்?

கோனர் :—வாத்தியாரய்யா! அந்த ஏழுமலையான் கிருபையாலெ எங்கொளந்தைகளுக்கு சோத்துக்கு ஒரு கொரவுமில்லிங்க! வவுரு கஞ்சி ஊத்துரனுங்க!

நான் :—இதுதான் நீர் உம் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளா?

மு. ராஜா :—இந்த காலத்திலே தின்ன சோறும் உடுக்க உடையும் கொடுத்தால் போதாதா? இன்னும் என்ன சார், செய்யவேண்டும்?

நான் :—நாயுந்தான் வயிர் வளர்க்கிறது! பூனையுந்தான் தின்கிறது. ஆனல் நாயோ, பூனையோ வேட்டி கட்டுவதில்லை. அந்த நாயுக்கோ பூனைக்கோ அதைப்பற்றி அக்கரையில்லை. ஆனல் நீங்கள் மாத்திரம் ஏன் உடை உடுக்கவேண்டும்?

நாயக்கர் :—என்ன சார்! எங்களைப் பித்துக்குளியாக்கிவிடுகிறீர்கள்போல் இருக்கிறது? அவைகள் ஐயறிவு படைத்தவை. நாம் ஆறறிவுபடைத்தவர்கள். அதைக்கொண்டு நாம் முன்னேறிவருகிறோம்.

நான் :—உங்களைப் பித்துக்குளியாக்க நான் இப்பொழுது பேசவரவில்லை. உங்கள் பித்தம் தெளியவே பேசுகிறேன். நாயக்கரே! ஆறறிவு என்றீர்களே! நமக்கு அதிகமாய் உள்ள அறிவு எது?

நாயக்கர் :—அதுதான் பகுத்தறிவு, சார்.

நான் :—நல்லது. அது எல்லாருக்கும் இருக்கிறதல்லவா?

நாயக்கர் :—இருக்கிறது சார். நாம் மிருக இனத்திநின்றும் வேருக்கப்பட்டிருப்பது அதன் மகத்துவத்தால்தான்.

நான் :—ஆகவே பகுத்தறிவுள்ள மனிதன் மிருகங்களைப்போல உண்பதும், உடுப்பதும் மாத்திரம்போதாது என ஏற்படுகிறதல்லவா? அப்படியானல் அவன் இன்னும் என்னசெய்யவேண்டும்?

நாயக் :—அவன் இன்னும் கல்விகற்று தன்னறிவை மிகவும் வளரச்செய்யவேண்டும்.

நான் :—கோனரே! முத்துராஜாவே! இப்பொழுது தெரிகிறதா; குழந்தைக்கு சோறுந் துணியும் மாத்திரம் போட்டால் போதாதென்று!

கோனர் :—வாத்தியாரய்யா! தெரிஞ்சுது. எம் புள்ளெயையும் பள்ளிக்கொடத்திலே போடணுங்கிறிங்க!

நான் :—உம் குழந்தைக்கு நீர் சோறுந் துணியும் தருகிறீர்; இது இரண்டையும்விட அவசியமானது அறிவு வளர்ச்சியே. நீர் சோறுபோடுவதால் உடம்பு பருக்கும். ஆனால் அறிவு குறையும். குழந்தைபிறந்த தினத்திலிருந்து ஆகாரம் கொடுக்காமலே இருந்தால் அது எப்படி இறக்குமோ அதைப்போலவே அறிவு வளரவும் ஆகாரம் தேவை. அந்த ஆகாரம் போடாவிடில் அறிவும் படியும். அறிவுக்கு ஆகாரம் எங்களிடத்தில் இருக்கிறது.

மு. ராஜா :—சரிங்க, வாத்தியாரய்யா! பெண்பிள்ளைகள் படித்து என்ன உத்தியோகம் ஆளப்போகிறது!

நான் :—படிப்பதெல்லாம் உத்தியோகத்திற்கல்ல. இதைப் பற்றி முன்னாடியே உங்களுக்கு சொல்லியிருக்கிறேன்! உங்கள் பெண் பிள்ளைகள் வருங்காலத்தில் தாய்மார்கள் அல்லவா?

நாயக் :—ஆகா! அதற்கென்ன சந்தேகம்?

நான் :—உங்கள் பெண்களுக்கு பிரசவகாலத்திலும், குழந்தை களுக்கு கக்குவான், இருமல், கட்டி, புண் இவைகள் ஏற்படுங்காலத் திலும் அவைகளுக்கு மருத்துவம் பார்ப்பது யார்?

நாயக் : ஏன், சார். மருத்துவத்திற்கு அம்பட்டச்சியும், கட்டி, புண் அறுப்பதற்கு அம்பட்டனும் இருக்கும்போது நமக்கென்ன குறை?

நான் :—இவர்கள் வைத்தியத்தில் படித்தவர்களா?

மு. ராஜா :—இல்லை, சார். படிப்பே இல்லை. வைத்தியப் படிப்பு ஏது? படிக்காவிட்டால் வைத்தியம் பார்க்கக்கூடாதா?

நான் :—முத்துராஜா! பார்க்கலாம்! உம் தொழில் விவசாயம். நீர் காலாகாலமாக நிலத்தை உழுதுவருகிறீர். ஆனாலும் உம்மை ஒரு விவசாய டெமான்ஸ்ரேட்டராகவோ, விவசாய மந்திரியாகவோ போட்டுக்கொண்டார்களா? அல்லது வைத்தியத்தில் சிறந்த உங்கள் அம்பட்டனை ஒரு டாக்டராகவோ யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார் கள்! ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது?

மு. ராஜா :—என்ன இருந்தாலும், டாக்டர் வைத்தியத்திற் காகவே படித்தவரல்லவா?

நான் :—விவசாயம் செய்யாவிட்டாலும் பயிர்பச்சைகள், விதைப்பது, அறுப்பது, அவைகளுக்கு ஏற்படும் பூச்சிகள், அவைகளை ஒழிப்பது போன்ற அநேக விஷயங்களைக் கற்றிருப்பதால் அவர் விவசாய நிபுணர். அதைப்போன்ற உங்கள் அம்பட்டனும், எவ்வளவு பாட்டாளியாயினும் நீர் எப்படி விவசாய நிபுணராகமாட் டீரோ, அவ்வாறே உங்கள் அம்பட்டனுமாகான்.

கோனார் :—வாய்த்தவங்க!

நான் :—ஆகையினால் உங்கள் பெண்கள் படித்திருந்தால் அவர்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வதோடு குடும்ப நிர்வாகம், குடும்ப சிக்கனம், குடும்ப வைத்தியம் இவைகளையும் கற்றுக்கொள்கிறார்கள். தங்கள் கணவன், மாமன், மாமி, தங்களின் குழந்தைகள் இவர்களின் தேகத்தை தாங்களே கவனித்துக்கொள்ளலாம். அநாகரீகமான அம்பட்டச்சி வரத் தேவையுமிராதல்லவா?

நாயக் :—படித்த பெண்களிடம் சிக்கனமேது சார்? வரவிற்கு மிஞ்சின செலவாகத்தானே அனுபவத்தில் தெரிகிறது?

நான் :—ஆம், ஒரு சிலர் இருக்கலாம். அவர்கள் உயர்தரக்கல்வி பயின்றவர்களாக இருப்பர். ஆரம்பக்கல்விமட்டும் பயின்றவர்கள் பெரும்பாலும் சிக்கனமாகவே இருப்பார்கள். பள்ளிக்கூடத்தில் தையல் வேலை, பின்னல் வேலை முதலியனவும் கற்றுக்கொடுக்கிறோம். தன் கணவன், தன் குழந்தைகள் முதலியோருக்கு வேண்டிய துணிகளைக் கைத்தையல் மிஷினை வைத்துத் தைத்துக்கொள்ளலாம். இதனால் நல்ல லாபம். பின்னல் வேலை மனதிற்கும் உற்சாகம், லாபகரமுமானது. நல்ல பொழுதுபோக்குமாகும். இப்படி இருக்கும் பெண்கள் வளர்க்கும் குழந்தைகளுக்கும் கல்வியற்ற பெண்களால் வளர்க்கப்படும் குழந்தைகளுக்கும் வித்தியாசம் இல்லாமலாபோகும்? 'அன்னையே முன்னறி தெய்வமாதலால் அவள் படித்திருந்தால் அவள் தன் பிள்ளைகளை நேரிய முறையிலே வளர்த்து உத்தம மக்களாகவும், தேசத்திற்குதவும் மக்களாகவும் கொடுப்பார்கள்! 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பதால் சிறு வயதில் எம்முறையில் ஒரு தாய் தன் குழந்தையை வளர்க்கிறாளோ அதேபோல்தான் பின்னர் அதன் வாழ்நாளிலும் காணப்படும் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்! எனவே ஆண்களைவிடப் பெண்களே அத்யாவசியமாகப் படிக்கவேண்டும் என்பதும் புலனாகவில்லையா?

மு. ராஜா :—ஆமாங்க, ஆமாங்க. நீங்க சொல்றதைப் பாத்தா முக்கியமா பெண்பிள்ளைகளைத்தான் படிக்கப்போடுணும்னு தெரியறது. வாத்தியாரய்யா! பெண்களுக்கும் கல்வி அவசியம் என்ற உண்மை இன்றைக்குத்தான் எங்களுக்கு புரிஞ்சுது.

கோனார் :—வாத்தியாரய்யா! இந்த ஏளை கண்ணை திறந்துவிட்டிங்க! நாளையில் இருந்து எம் மவளை பள்ளிக்கொடத்துக்கு அனுப்பறனுங்க!

நாயக் :—வாத்தியார் சார்! வெகு அருமையான விஷயத்தை இன்று நாங்கள் அறிந்தோம். இதேபோல் நாளைக்கும் வருகிறோம். நாங்கள் சென்றுவரலாமா?

நான் :—நாயக்கரே! கோனாரே! மிக்க வந்தனம். சென்று வாருங்கள்!

பாடக் குறிப்பு

பாடம் : இயற்கை **பாகம் :** சில பழங்கள் (புளி, கொய்யா, மாதுளை) **வகுப்பு :** I

நோக்கம் : புளி, கொய்யா, மாதுளை முதலிய பழங்களின் உருவம், நிறம், உருசி, கொட்டையின் இருப்பு, தோல், ரசம், நார் இவை முதலான விஷயங்களைப்பற்றி நிதர்சனமாய் அறிதல்.

உபகரணம் : மேற்கூறிய பழங்கள்.

ஆரம்பம் :

மார்க்கெட்டில் பையன்கள் நேரில்பார்த்த கடைகளையும், பழக் கடையில் பார்த்த பழங்களைப்பற்றியும் சிறுவர்கள் சொல்லக்கூடிய விஷயத்தை தாராளமாய் சொல்லச் செய்யவும்.

இன்னும் பழங்களைப்பற்றி அதிக விஷயத்தைப் படிக்கப்போகிறோம் எனக்கூறி பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம் :

புளியம்பழம் : நீளமானது—மரநிறம்—புளிப்பு—சதையினுள் கொட்டை—கெட்டியான ஓடு—ரசம் கிடையாது—நார் கொஞ்சம் உண்டு (கோது) குழம்புவைக்க உதவும்.

கோய்யா : உருண்டை மஞ்சள்நிறம்—இனிப்பு ஏராளமான சிறிய விதைகள்—பிரிக்கமுடியாத லேசான தோல்—ரசமும் நாரும் கிடையாது.

மாதுளை : உருண்டை—லேசான மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறம்—தித்திப்பு—சிவப்பு, வெள்ளை முத்துக்கள்—சிறிய விதைகள்—கனமான தோல்—ரசம் உண்டு ஆனால் நார் இல்லை.

முறை : ஆசிரியர் பழங்களை நேரில் கொண்டுவந்து பையன்களை உற்றுப்பார்க்கச் செய்தும் கையால் தொட்டும், வாயில் போட்டும், வாசனையை நுகரச்செய்தும், பல கேள்விகள் மூலமாய் அவர்களின் ஐம்புலன்களையும், உற்றுப்பார்க்கும் சக்தியையும், தாமாய் ஆலோசிக்கும் சக்தியையும் விருத்திபண்ணி விஷய ஞானமுள்ளவர்களாகச் செய்யவேண்டும்.

முடிவுப் பரீக்ஷை :

1. புளியம்பழம், கொய்யா—உருவம் என்ன ?
2. எதைத் தின்றால் புளிக்கும் ?
3. கொய்யா, மாதுளை—நிறம் என்ன ?
4. மாதுளையில் ரசம் உண்டா ?

சிறு கதை

புத்திகெட்ட பாம்பு

ஒரு காட்டில் ஒரு பெரிய ஆலமரமிருந்தது. அந்த ஆலமரம் பெரிய கொப்புகள் விட்டிருந்தது. அக்கொப்புகளில் பறவைகள் கூடுகட்டி, முட்டையிட்டு, குஞ்சுகள் பொரித்துச் சுகமாக வாழ்ந்து வந்தன. அதே மரத்தடியில் ஒரு துஷ்டப் பாம்பும் வசித்துவந்தது. அத்துஷ்டப் பாம்பு பறவைகளிடும் முட்டையை, பறவைகள் வெளியே போயிருக்கும் சமயம் சேதப்படுத்திவிடும். அதனால் அப்பறவைகள் பாம்புக்குப் பயந்திருந்தன.

அப்பறவைகளுள் ஒரு காக்கையும் அங்கு கூடுகட்டி வாழ்ந்தது. சிலநாள் சென்று அக்காக்கை முட்டையிட்டது. முட்டையிட்டுவிட்டு இரைதேட வெளியே பறந்துசென்றது. அது வெளியே போயிருக்கும் சமயம் முன் சொன்ன துஷ்டப் பாம்பு மரத்தின்மேலேறி அதன் முட்டைகளைச் சேதப்படுத்திவிட்டு, இறங்கி புற்றுக்குள் சென்றுவிட்டது. காக்கை, திரும்பிவந்தபொழுது, பாம்பு தன் முட்டைகளைச் சேதப்படுத்தியிருந்ததுகண்டு விசனப்பட்டது. நாள்தோறும் இவ்வாறே நடந்துவர காக்கை மிகவும் வருத்தப்பட்டது.

ஒருநாள் காக்கையின் நண்பனான நரி ஒன்று அக்காட்டிற்கு வந்தது. காக்கை விசனத்துடனிருப்பதுகண்டு நரி, "காக்கையாரே, காக்கையாரே ஏன் விசனமாயிருக்கிறீர்?" என்று கேட்டது.

அதற்கு அந்தக் காகம், "நானிட்ட முட்டைகளை, மரத்தின் அடியிலுள்ள ஒரு துஷ்டப் பாம்பு நாள்தோறும் சேதப்படுத்திவிடுகிறது. அதைக் கொல்ல முடியவில்லை. அதனால் நான் வருத்தமாயிருக்கிறேன்" என்று சொல்லிற்று.

"நண்பா, நான் அதற்கொரு உபாயம் சொல்லுகிறேன், கேள். நீ பறந்துபோய், பக்கத்தூர் ராஜகுமாரி குளிக்கையில் அவள் கழற்றி வைத்திருக்கும், பொன் சங்கிலியை அவளறியத் தூக்கிவந்து, இந்தப் புற்றில் போடு; உன்னைத் தொடர்ந்துவரும் சேவகர்கள், சங்கிலியை எடுக்கப் புற்றைத் தோண்டுவார்கள்; பாம்பு சீறிக்கொண்டு வரும்; அவர்கள் அதை அடித்துக் கொன்றுவிடுவார்கள்; அதன்பின் நீ சுகமாய் வாழலாம்" என்று நரி சொல்லிற்று.

காக்கை மிகவும் சந்தோஷப்பட்டு நரியார் சொன்னபடியே பொன் சங்கிலியை ராஜகுமாரியறியத் தூக்கிவந்து புற்றில் போட்டது. சேவகர்கள் வந்து அப்புற்றைத் தோண்ட பாம்பு சீறிவந்தது. அவர்கள் அதை அடித்துக் கொன்றுபோட்டு சங்கிலியை எடுத்துக்கொண்டு போனார்கள். அதுமுதல் காக்கையும், மற்ற பறவைகளும் முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துச் சுகமாக வாழ்ந்தன.

ஆகையால் நாம் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் நமக்கே அத்தீங்கு வரும்.

எந்நேரத்திலும் உதவும் மருத்துவன்

(N. R. திருவேங்கடம். L. F. H. E. School, Megalathur.)

1. இதில் வெறும் புளிப்புமட்டுமன்றி பொட்டாஸ், கால்ஷியம், மக்னீஷியம், பாஸ்வரம் முதலிய உப்புச்சத்துக்களும் உள்ளன.

2. இதை வாரம் இருமுறை தலையில் தேய்த்துக் குளித்துவந்தால் எண்ணெய் தேய்ப்பே தேவையில்லை. உடம்பு முழுதுங்கூட தேய்க்கலாம். தேகம் காந்தியடையும்.

3. கன்னத்தில் தினம் தேய்த்துவந்தால் கன்னங்கள் பளபளப்பு அடையும். எந்த வாசனைப்பொடியும் (Powder) க்ரீம் (Cream) களும் இதற்கு நிகராகாது.

4. வேட்டி அல்லது கை இவைகளில் கறை பட்டால் இப்பழத்தைக் கறைபட்ட இடத்தில் தேய்க்க அவை தூய்மையாகும்.

5. இது பல் தேய்க்கவும் உதவும். ஆறில் ஒரு பங்கு பழத்தையெடுத்து தோலை நீக்காமல் அப்படியே பல்லில் வைத்துத் தேய்த்தால் பல் வெண்மையாவதோடு பல்லீறுகளுக்கும் நல்லது. பற்களின் இடையேயுள்ள கிருமிகளும் இறந்துவிடும்.

6. இதை அடிக்கடி சாப்பிட்டுவந்தால் சிறுநீர்பிரித்திகளுக்கு (Kidneys)ம் நன்மை. உடம்பிலுள்ள கழிவுப்பொருள்களை அகற்றுவதில் சிறு நீருடன் ஒத்துழைக்கிறது.

7. மற்றும் இதன் சாறினால் குடல் சுத்தமாக்கப்படுகிறது. எப்படி பித்தளைப் பாத்திரங்களுக்கு புளி வெளுப்பைத் தருகிறதோ அப்படியே இதிலுள்ள புளிப்புச்சத்தினால் குடல் சுத்தமாகிறது. ஒரு தேக்கரண்டி சாறுடன் கால் படி ஜலம் விட்டு குடித்தால் நல்லது. குடல் கழுவிக்கு (Enema) உபயோகப்படுத்தப்படும் நீருடன் இந்த சாறையும் கலந்தால் குடல் சீக்கிரம் சுத்தமாகும். வேளைக்கு ஒரு பழம் போதுமானது.

8. மற்றும் தொண்டை நோய் தொண்டைக்கள்ளி (Diphtheria) முதலிய வியாதிகள் வந்தால், வியாதி கண்ட தினத்திலிருந்து நாலைந்து தினங்கள் விடாமல் இந்த சாறினால் வாயலம்பினால் நிவர்த்தியாகும்.

9. இன்னும் குரல்வளையில் (Throat) உபத்திரவம் உண்டானால் இதன் சாறையும் தேனையும் சமபாகமாகக் கலந்து வேளைக்கொரு கரண்டி குடித்துவர சிலநாளில் குணமாகும்.

10. காய்ச்சலோ, தொண்டைவரட்சியோ ஏற்பட்டால் வெந்நீரில் இதன் சாறைப் பிழிந்துவிட்டு குடித்தால் சுகமாகும். வேண்டுமானால் கொஞ்சம் தேனும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் சர்க்கரைமட்டும் சேர்க்கலாகாது.

11. சர்மவியாதியான சொறி, சிரங்கு வந்தால் இதன் சாறைத் தடவலாம். எரிச்சல் அதிகமாயிருப்பினும் சீக்கிரம் குணமாகும். அடிக்கடி இப்பழத்தைச் சாப்பிட்டோ அல்லது தேகத்தில் தேய்த்தோ வருபவர்களைச் சொறி, சிரங்கு அண்டாது.

12. மற்றும் கீல்வாதம் (arthritis) கணுவாதம் (gout) இடுப்புவாதம் (Sciatica) இவைகள் வந்தால் அந்த பாகங்களில் இதன் சாறைவிடாமல் தேய்த்துவர அபூர்வ குணமாகும்.

13. வயிற்றுக்கடுப்பு (Dysentry) வயிற்றுக்கழிச்சல் (Diarrhœa) இந்நோய்கள் வந்தால் நன்றாகக் காய்ச்சின பசுவின்பால் ஒரு டம்ளர் எடுத்து ஒரு பழத்தில் பாதியைப் பிழிந்துவிட்டு சாப்பிட்டு வர இரண்டேவேளையில் இந்நோய் பறக்கும்.

14. இதன் சர்பத் சிறந்த கோடைகால பானம். இதுவே உலகில் சிறந்த சர்பத் என ஸர் ஜான் ஸைமன் கூறுகிறார்.

15. இதன் ஊறுகாய் பரமானந்தம். இதன்மேல் தோலை நெருப்பில் வதக்கி குழம்பில்போட்டால் குழம்பின் மணம் கூரையைத் தூக்கும்.

இத்தகைய மருத்துவன் யார்? இவனே "**எலுமிச்சம்பழம்**" என்ற சர்வரோக நிவாரணி. உங்கள் கொல்லையில் இவன் இருக்கிறானா? இல்லையேல் உடனே ஒரு செடியைவைத்து வளர்க்க இன்னும் தயக்கமா?

யோசனைக் கணக்கு விடை

(கொத்து 33, மலர் 12, பக்கம் 232.)

விடை:—ஆரஞ்சுப்பழங்கள் **10**; கொய்யாப்பழங்கள் **30**. ஷை விடையளித்தவர்கள்: U. S. Rayappan, I. Susaipragasam, R. Arul Susai Gnanam, S. Arpudasamy, V. N. P. Sch., Puthur, M. Ponnunathan, V. Rajagopalan, H. M. Naranamangalam, S. Joseph, H. M. & Gnanambal, teacher, Ammayagaram.

விடுகவி விடைகள்

(கொத்து 33, மலர் 12, பக்கம் 232)

விடைகள்:—(1) பட்டம். (2) அ, ஆ, முதலிய உயிரெழுத்துக்கள். விடையளித்தவர்கள்: V. Rajagopalan, Arpudasamy, S. Joseph, Gnanambal.

தமிழ்நாடு ஆவணக் காப்பக ... 600 008

கழுதைகள் உபயோகமற்றவையா ?

(T. Savarirajan)

உலகத்திலுள்ள ஜீவராசிகள் அனந்தம். அவைகளில் வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளில் கழுதையும் ஒன்ருகும். கழுதைகள் குதிரைகளைப் பலவிதத்தில் ஒத்திருப்பினும் இவைகள் இரண்டையும் மக்கள் நடத்தும் வகையில் பலத்த பேதமிருக்கிறது. குதிரைகளை அல்லும் பகலும் சர்வஜாக்கிரதையாய் கண்காணிக்கின்றனர். ஆனல் கழுதைகளையோ அவைகளே ஆகாரத்தைத் தேடிக்கொள்ளும் வகையில் விட்டுவிடுகின்றனர். என்ன பேதமை! என்ன ஜீவகாருண்யம்!!

கழுதைகளின் ஜென்ம பூமியைப்பற்றிப் பல அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், இவைகள் மத்திய ஆசியாவிலிருந்துதான் பிறநாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டன என்று சொல்லப் பல சான்றுகள் மலிந்துகிடக்கின்றன. தற்சமயம் ஐரோப்பா முதலிய இடங்களில் காணப்படும் கழுதைகளைவிட, மத்திய ஆசியா, டார்டாரி, பெர்ஸியா, மெஸபெட்டோமியா முதலிய இடங்களில் தென்படுவன மிகவும் அழகுவாய்ந்தனவாயும், திடகாத்திரமுள்ளனவாயும் இருக்கின்றன. நம் தேசத்தில் ஒருவகைத் தொழிலாளரே இவைகளை ஒருவாறு வளர்க்கின்ருர்கள். ஒரு சாதாரணக் குதிரை வாங்க எவ்வளவு ரூபாயாகுமோ அதில் இருபத்தைந்தில் ஒரு பாகம்தான் ஒரு கழுதையின் கிரயம். இவைகளைப் போஷிப்பதும் எளிது. மற்றப் பிராணிகள் தங்களுக்கு வேண்டாமென்று ஒதுக்குகின்ற தழைகள், காகிதம் முதலியவைகளை மனமாரத் தின்றே வாழ்கின்றனவாய் இருக்கின்றன. இவைகளை புத்தியில்லாத கழுதைகள் என்று சொல்லுகிருேம். ஆனல் குதிரைகளுக்குள்ள புத்திக்கூர்மை இவைகளுக்கு உண்டு.

கழுதையின் தோலை பதனிட்டு செருப்பு முதலியன செய்ய உபயோகிக்கலாம். மேளம் (Drums) செய்யவும் இதன் தோல் உதவும். இவைகளின் எலும்புகள் மிகக் கெட்டியானவை. இவைகளை அக்காலத்தவர்கள் போர் செய்யத்தக்க ஆயுதங்களாக உபயோகித்தார்கள். ஆதிகாலத்தில் அவ்வெலும்புகளால் குழல்கள் (Flutes) செய்து வாசித்தனர். பண்டைகால ரோம விவசாயிகள் கழுதைகளின் மாமிசத்தை மகத்தான உணவாகக் கருதினர். மாய்சினஸ் என்ற ரோம வீரப்பிரபு ஒருதரம் இக்கறியின் ருசியைக்கண்டதும் ரோமர்கள் யாவரும் பணக்காரர் ஏழையென்றும் பாராமல் புசித்தனராம். கி. பி. 2-ம் நூற்ருண்டிலிருந்த காலன் என்ற கிரீஸ் தேச வைத்திய நிபுணர் கழுதையின் மாமிசத்தை மான் கறியுடன் ஒப்பிட்டு இதன் கறி விசேஷமான ருசியுள்ளதென்பது புலப்படுத்தினூராம்.

கழுதையின் பால் மிகவும் பிரயோஜனமானது. சிறிதளவு பிராந்தியுடன் கலந்து பிரசவ ஸ்திரிகளுக்குக்கொடுத்தால் பலவீனம் நிவர்த்தியாகும். க்ஷயரோகத்தையும் இது குணப்படுத்தும். இப்பால் கிடைக்காத தருணங்களில் ஒருவிதச் செயற்கைப்பால் தயார் செய்கிறார்கள். அதில் பெரும்பாலும் பசுவின்பாலும், பச்சை அரிசியின் வடிக்கஞ்சியும், வேகவைத்த முட்டையின் வெள்ளைக்கருவும் கலந்து இருக்கும். எனவே இப்பொருள்களிலுள்ள சத்து கழுதைப் பாலில் இருக்கிறதென்பது புலப்படுகிறது.

இக்கழுதைகளின் ஒரு பிரிவுதான் கோவேறுகழுதைகள். அரேபியா முதலிய இடங்களில் கரடு முரடானபாதைகளைக் கடக்க இவைகளை உபயோகிக்கிறார்கள். கோவேறுகழுதைகள் அதிவேகமாய் ஓடாவிடினும் பெரும் நடையாயும், பாரமான மூட்டைகளையும் தூக்கிச்செல்லும் வண்டிகளிலும் பூட்டி ஓட்டலாம்.

யோசனைக்கணக்கு

(U. S. Rayappan)

ஓர் பெருக்கலில், பெருக்கப்படும் எண்ணின் கூட்டுத்தொகையையும், பெருக்கும் எண்ணின் கூட்டுத்தொகையையும் கூட்டின், விடையைப்போல் அவை பெருக்கிவந்த விடையிலுள்ள எண்ணின் கூட்டுத்தொகையானது 2 மடங்காக இருக்கவேண்டும். அப்படியானால் பெருக்கும் எண், பெருக்கப்படும் எண் யாது?

விடுகவிகள்—இது என்ன?

1. மூன்றுபடி நெல்குத்த ஆறுபடி அரிசியாகும்.
2. எத்தனைபேர் ஏறினாலும் சலியாத குதிரை.

C. Michael.

3. கணக்கற்ற கால்கள் இருந்தும் கவிழ்ந்துதான் நடக்கவேண்டும்.

R. Arul Susai Gnanam.

" உங்களுக்குத் தெரியுமா "

(A. A. Muthu)

பசும் பாலிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள் நம் தேகத்தின் எவ்வெப் பாகங்களை வளர்க்கின்றனவென்றுதான் கேட்க வந்தேன்.

பாலை உறைகுத்திச் சில மணி நேரம் வைத்தால் அது 3 பாகங்களாக மாறுபாடடைகிறது. (1) ஆடை. இது மேல் படர்ந்து மிதக்கும் பதார்த்தம். இதுவே பாலில் கலந்துள்ள வெண்ணெய்ப் பொருள். எண்ணெயைப்போன்றது. கொழுப்புப் பொருள் என்பர். எரியக்கூடியது. ஆனதுபற்றி உணவுடன் சேர்ந்து, எரிந்து தேகத்திற்கு உஷ்ணத்தை உண்டாக்கவல்லது. கை, கால் முதலிய உறுப்புக்களை நகரச்செய்யும் சக்தி வாய்ந்தது. (2) **தயிர்**. ஆடையின்கீழ் இருக்கும் பொருள். இது மாமிசத்தை வளர்க்கும் பதார்த்தம். ஆகாரத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் தேகம் சதைபோட்டு வளரும். **மோர்**. தயிரின்கீழ் தங்கி உள்ளது. சுத்தமான மோரில், எலும்பு, பல், நகம் முதலியவற்றை வளர்க்கும் உப்புகள் கரைந்துள்ளன. அதில் தயிர் கட்டியின் சிறு துணுக்குகள் (Whey) மிதந்துகொண்டிரா.

(3) **தித்திப்புப் பதார்த்தம்**. பாலிலுள்ள தித்திப்புதான் புளிப்பாக மாறி வெண்ணெயிலும் மோரிலும் விளங்குகிறது. இது ஒரு வித சர்க்கரையே. இது பாலிலிருந்து தனியாய்ப் பிரிவதில்லை. இதுவும் தேகத்திற்கு உஷ்ணத்தையுண்டாக்கவல்ல பொருளாகும்.

விகடம்

உபாத்தியாயர் :—அமல்! 600 பச்சைமிளகாயை மூவருக்குப் பிரித்துக்கொடுத்தால் ஒவ்வொருவனுக்கும் என்ன வரும்?

அமல் :—சீதபேதி வரும், சார்!

G. Dharmanathan.

தாய் :—இந்த வாத்துகளுக்கு ஒவ்வொருநாளும் இவ்வளவு தானியம் போட யார் வீட்டிலே இருக்கு?

மகன் :—நம்ம வீட்டிலே இருக்கபோயிதானே போடுறீங்க!

C. Michael.

மூலிகைகள்

(P. M. B. Mariamichaelsamy—old student)

1. கை கால் வலி: முடைக்கத்தான் இலைகளை அரைத்து வலிக்குமிடத்தில் பூசுக. அல்லது வாதமடக்கி இலைகளை அரைத்துப் பூசலாம்.

2. உடல் காந்தல்: ஆவாரம் பூ காப்பிப் பானம் செய்யத் தகும். அல்லது ஆவாரம் பிசினைப் பாலில் போட்டுக் குடிக்கவும்.

3. சோறி, சிரங்கு: துளசி, குப்பைமேனி இலைச்சாறு எடுத்து அதில் கொஞ்சம் கெந்தகப்பொடி கலந்து சிரங்கில் போடவும்.

4. பித்தம்: இஞ்சிச் சாற்றில் எலுமிச்சம்பழம் சாற்றைக் கலந்து நாட்டுச் சர்க்கரை சேர்த்து அதிகாலையில் குடிக்கவேண்டும். அல்லது வேப்பம் பூவை வறுத்து தண்ணீர் ஊற்றி 1/8 பங்காக வற்ற வைத்து வேளைக்கு வீசம் படி வீதம் மூன்று தடவை ஒரு நாளில் குடிக்கவும்.

5. தலைவலி: மிளகை வறுத்து இஞ்சிச்சாற்றில் கடைந்து தலையிலும் நெற்றியிலும் பற்றுப்போடவும்.

6. இரத்தக்கடுப்பு: (1) மிளகுதக்காளி இலைச்சாற்றைத் தயிரில் கலந்து அதிகாலையில் குடிக்கவும். (2) இரவில் ஆமணக் கெண்ணெயைப் பாலில் கலந்து சாப்பிடுவது நலம்.

7. வாய்ப்புண்: பேதிக்குச் சாப்பிடவும். கைக்குத்து அரிசியைச் சமைத்துச் சாப்பிடுக. வெள்ளை ஆதாளைப் பாலைத் தடவுக. அகத்திக்கீரையை வேகவைத்த தண்ணீரைக் கொப்பளிக்கவும். மாசிக்காயை மென்று வாயில் அடக்கிக்கொள்ளவும்.

8. பல்வலி: உப்பு நீரைக் கொப்பளிக்கவும். பொட்டாஸியம் பெர்மாங்கினேட் கலந்த ஜலத்தைக் கொப்பளிக்கவும். யானைப் பல்லைத் தேய்த்து கன்னத்தில் பற்றுப்போடவும். குப்பைமேனி இலையைக் கடித்து வாயில் அடக்கிக்கொள்ளவும்.

9. வயிற்றுவலி: பேதிக்குச் சாப்பிடுக. சுடு நீரில் வெண்ணெயைப் போட்டுக் குடிக்கவும்.

10. கண்வலி: புளிய இலையைக்கொண்டு ஒத்திடம் போடலாம். அல்லது அகத்தி இலைகளைக்கொண்டு ஒத்தடம் போடலாம். படிக்காரத்தைக் கரைத்த ஜலத்தை வடிகட்டி எடுத்துக்கொண்டு கண்களில் ஊற்றிக் கழுவி வரவேண்டும்.

உபாத்தியாயர்:—டே! ஜோ! நானும் ஒங்க அப்பாவும் ஒரு வகுப்பில் படித்தவர்களடா!

ஜோ:—ஆமாங்க ஸார். எங்கப்பாகூட ஒங்களுக்கு ஒண்ணும் தெரியாதுண்ணு சொன்னாருங்க.

S. Arulanandam, VII Stand.

... லபர் ஆசிரியர் சங்கம்

திருச்சி பிஷப் ஹீபர்ஸ்கூல் ஹாலில் 13-6-43-ல் அடிஷனல் பப்ளிக் பிராசிகியூடர் திருவாளர் S. J. ரத்னசாமி, M.A., B.L. அவர்கள் தலைமையில் கூடியது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 200 லேபர் ஆசிரியர்களும் பல உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர். ஷை லேபர் ஆசிரிய சங்கத்தை திருச்சி உதவி ஜில்லா கல்வி அதிகாரி, திருவாளர் S. வீராசாமி பத்தர் அவர்கள் M.A., L.T., திறந்துவைத்தார். அவர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும், சங்கத்தின்மூலம் தங்கள் குறைகளை எப்படிப் பரிகரிக்கலாமென்பதையும் தெரிவித்ததுடன் லேபர் ஆசிரியர் எப்படி யுத்தத்தில் உதவி செய்யலாமென்றும், ஒவ்வொரு ஆசிரியரும் மாதம் ஒரு ரூபா வீதம் 10 ரூபாய்க்கு டிபன்ஸ் சேவிங்ஸ் சர்டிபிகேட் வாங்கலாமென்றும், பட்டாளத்தில் சேருவதால் தாழ்த்தப்பட்டவர்களின் சமூக பொருளாதாரநிலை உயருமென்றும் சொன்னார்.

தலைவர் தம் முன்னுரையில் லேபர் ஆசிரியர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களென்றும், தங்கள் குறைகளை சர்க்காருக்கு தெரிவித்தால் வேண்டிய சவுகரியங்கள் ஏற்படுமென்றும் தெரிவித்து, லேபர் ஆசிரியருக்குத் தன்னாலான உதவிசெய்ய முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

ஜில்லா லேபர் ஆபீசர் திருவாளர் சிதம்பரம் பிள்ளை ஷை லேபர் ஆசிரிய சங்கத்தை ஆசீர்வதித்து, உபாத்தியாயர்களின் குறைகளைக் கவனிப்பதாகக் கூறினார்.

ஷை சங்கத்தில் ராஜ விசுவாசப் பிரமாணத்தைப்பற்றியும், யுத்தத்தில் நேசநாடுகள் வெற்றிபெறவும் வேண்டிக்கொண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. சங்கத் தேர்தலில் கீழ்க்கண்டவாறு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1. **தலைவர்:**—முசிரி தாலுக்கா களத்தூர் லேபர் பாடசாலை எட்மாஸ்டர், P. முத்துசாமி.

2. **உபதலைவர்:**—லால்குடி தாலுக்கா கிரமங்கலம் லேபர் பாடசாலை எட்மாஸ்டர், J. S. சுந்தரராஜ்.

3. **காரியதரிசி:**—திருச்சி பாடிசன் ஸ்கூல் எட்மாஸ்டர், S. M. சொக்கலிங்கம்.

4. **உதவி காரியதரிசி:**—முசிரி தாலுக்கா அரியனும்பேட்டை லேபர் பாடசாலை எட்மாஸ்டர், R. வேதமுத்து.

5. **பொக்கிஷதார்:**—திருச்சி சோளமாதேவி லேபர் பாடசாலை எட்மாஸ்டர், S. சாமிமுத்து.

6. கமிட்டி மெம்பர்கள் :—1 naelsamy—old student) நல்லூர் லேபர் பாடசாலை, C. A. ...காரவேலு. 2. லால்குடி தாலுக்கா பெருவளநல்லூர் லேபர் பாடசாலை எட்மாஸ்டர், I. சவரி நாயகம். 3. லால்குடி தாலுக்கா பெரகம்பி லேபர் பாடசாலை எட்மாஸ்டர், S. கிருஷ்ணசாமி. 4. பெரம்பலூர் தாலுக்கா பசும்ப லூர் லேபர் பாடசாலை எட்மாஸ்டர், பண்டிட் ராமலிங்கம். 5. பெரம் பலூர் தாலுக்கா லாடபுரம் லேபர் பாடசாலை S. பெருமாள். 6. முசிரி தாலுக்கா காட்டுப்புத்தூர் லேபர் பாடசாலை A. அடைக்கலம். 7. குளித்தலை தாலுக்கா கோட்டமேடு லேபர் பாடசாலை R. முத்து கிருஷ்ண நாயுடு. 8. குளித்தலை தாலுக்கா கள்ளப்பள்ளி லேபர் பாடசாலை A. மரியசூசை. 9. கரூர் தாலுக்கா திருக்காம்புலியூர் லேபர் பாடசாலை எட்மாஸ்டர், V. நடேசன். 10. உடையார்பாளை யம் தாலுக்கா M. வீரன் உபாத்தியாயர், துரைசாமி பிள்ளை.

தமிழ்நாடு ... சங்கம்
189978
சென்னை-600 008

S. M. Chockalingam,
Secretary.
30-6-'43.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

புதுச் சேர்க்கை (New admissions) வழக்கம்போல் ஜூன் மாதம் 30-ம் தேதி புது மாணவர்களைச் சேர்ப்பதன்முன் பிரவேச பரீட்சை நடத்தப்பட்டது. பின்னர் எலிமெண்டரி, ஸெக்கண்டரி கிரேடுகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேர்க்கப்பட்டனர்.

ஆசிரியர் சங்கம். எம் பாடசாலை ஆசிரியர்களின் சங்கக் கூட்டம் ஷை தேதியில் எம் சங். தலைமை ஆசிரியர் அவர்களின் தலைமையின்கீழ் கூடியது. சென்ற T. S. L. C. பரீட்சையில் நம் பாடசாலை மாணவர்கள் மிகத் திறமையாய்த் தேறியதைப்பற்றித் தலைமை **ஆசிரியரவர்கள்** அனைவர்க்கும் புகழுரை கூறி, மேலும், மேலும், நம் ஆசிரியர்கள் நம் பாடசாலையின் திறமை குன்றாதபடி ஊக்கத்துடன் உழைக்குமாறு கேட்டுக்கொண்டனர். தலைமை ஆசிரி யர் அவர்களால் அன்று மாலை சிற்றுண்டி (Tea Party) அளிக்கப் பட்டது. ஆசிரியர் அனைவரும் அன்னவருக்கு நன்றி பாராட்டித் தலைமை ஆசிரியருடன் எவ்வாற்றானும் ஒத்துழைப்பதாக வாக்களித் தனர். ஜெபத்துடன் ஷை நிகழ்ச்சிக்கூட்டம் இனிது முடிந்தது.

nd.

கீதம்

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

9, ஹிந்துஸ்தான் (சல்ரநௌஜவான் மெட்டு) திச்ரகதி ஆதிதாளம்

கல்விச்சிறப்பு

பல்லவி

தாஸ	ஸாரி	*கரிஸ	ஸாரி	தாஸ	ஸாரி	*கரிஸ	;,
பள்ளி	வாருங்	கள் . .	பாலர்	பள்ளி	வாருங்	கள் . .	. .
ரீம	பாத	பாம	காரி	தாஸ	ஸாரி	*கரிஸ	;,
துள்ளி	ஆடி	பாடி	ஓடி	பள்ளி	வாருங்	கள் . .	. .

சரணங்கள்

தாஸ	ஸாரி	கா,	;,	ரீஸ	ரீக	ஸா,	;,
கல்வி	யேபு	வில் .	. .	நல்லுயர்	பொ	ருள் .	. .
காக	பாக	பா,	;,	காப	தாநி	பா,	;,
செல்வ	ருங்க	ளை .	. .	தேற்றி	டும	ருள்.	. .
*நீநி	நிநீ	நீநி	நிதா	பாத	பமா	கா,	.ஸ
கால	மதில்	பால	ரும்மை	சீர்ப	டுத்தி	ட .	.நீர்

(மற்ற சரணங்களை இதேமாதிரி பாடவும்)

2. நல்லறிவையும் சொல்வலிமையும்
பல்துறைகளில் நற்தொழில்களும்
பாலருமக் கேற்றமுறையில்பயின்றிட—நீர் (பள்ளி)

3. எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்
உண்மை இதனை உணர்ந்திடுவீரே
மண்ணிலுயிர்க்கேற்றதுணை கல்வியென்றறி—நீர் (பள்ளி)

4. கற்றவர்க் கென்றும் சிறப்புயர்ந்திடும்
நற்றவர்பெயர் நலம்பொழிந்திடும்
சொற்களால் புகழ்ந்துரைக்கும் கல்விகற்றிட—நீர் (பள்ளி)

குறிப்பு :—நக்ஷத்திர குறி இட்ட இடங்களில் சாதாரண காந்தாரமு[ம்]
கைசிகிநிஷாதமும் வரும்.

சென்னை 600 008

OUR EMPLOYMENT BUREAU

WANTED Two Secondary Grade Trained and two Higher Elementary Grade Trained Teachers of any sex for Nammalwar Higher Elementary School, Namakkal.

Apply to: **Sri N. Varadiar,**
Manager,
N. H. E. School,
Namakkal, SALEM Dt.

WANTED immediately Three Secondary Grade Trained Teachers on Rs. 25/- plus Rs. 2/- dearness allowance.

Apply to: **The Manager,**
Sri A. Ramasamy Chettiar,
Sri Krishna Vilas Higher Ely. School,
Kalangani, Puduchatram P.O.,
Namakkal Tq., SALEM Dt.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.